1971 அக்டோபர் 21]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் அதைக் கடமையாகக் கொண்டிருக் கிறார்கள்.

தமிழில் தந்திச் செய்திகள்

* 9 **வினா—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழில் தந்தி அடிக்கும் முறையினைச் செயல்படுத்து மாறு மத்திய அரசைத் தமிழ் நாடு அரசு கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) அந்தந்த வட்டார மொழிகளில் எழுதி அனுப்பப்படும் தந்திச் செய்திகளைப் பெற்றுக்கொண்டு, தந்தி அனுப்புவதற்கு வகை செய்ய வேண்டுமென்று மத்திய அரசை, மாநில அரசு வற்புறுத்தி யுள்ளது. ஆனால் இது நடைமுறையில் ஏற்கக் கூடியதாக இல்லா மையால், இக்கருத்தை ஒப்புக்கொள்ள இயலாதென்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, தமிழில் தந்தி அடிக்கும் முறையை துரிதப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை நீண்டகாலமாக தமிழ்நாடு மத்திய அரசாங்கத்திடம் எடுத்துக் கூறி வருகிறது. நடைமுறையில் சிக்கல் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நடைமுறையில் உள்ள சிக்கல் எத்தகையது என்பதை விளக்கிக் கூறி, மீண்டும் தமிழில் தந்தி யடிக்கும் முறையை கையாள வேண்டுமென்று, மத்திய அரசோடு தமிழக அரசு தொடர்பு கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்திடம் நம்முடைய கோரிக்கை குறித்து வலி யுறுத்தப்பட்டது. மீண்டும் நம்முடைய கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துவோம்.

Dr. H. V. HANDE : Sir, is the Hon. Minister aware of the fact that Money Order and Telegraph forms are given to the people only in Hindi and not even in English and Tamil and if so, whether it would be possible for this Government to impress on the Centre that as far as Tamil Nadu is concerned, Money Order and Telegraph forms should contain Tamil and English words also?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தியில் மாத்திரம் மணியார்டர் பாரம் இருக்குமானால், அது கண்டிக்கத் தக்கது. ஆங்கிலத்திலும் இருக்க வேண்டுமென்றுதான் அரசாங்கம் வற்புறுத்தியுள்ளது. கனம் அங்கத்தினர் சொல்வது போன்று அப்படியிருக்குமானால், மத்திய அரசாங்கத்தை மீண்டும் வற் புறுத்துவோம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தமிழிலே தந்தி அடிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்று சொன்னார்கள். ஆனால் இந்தியிலே தந்திச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இந்தியிலே தந்திச் செய்திகள் அனுப்ப மட்டும் ஏற்பாடுகள் செய்திருக்கின்ற மத்திய அரசாங்கம், மற்ற பிராந்திய மொழிகளிலே தந்திச் செய்திகள் அனுப்ப ஏற்பாடுகள் செய்யாமல் இருப்பதற்கு என்ன என்ன காரணங்கள் சொல்கிறார்கள். இந்த விஷயத்தில் மீண்டும் மத்திய அரசாங்கத்தை நம்முடைய அரசாங்கம் வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்போது தந்திகளை வட்டார மொழிகளில் கொடுக்க இயலும். ஆனால் ரோமன் வரிவடிவில் (ஆங்கிலம்) அல்லது தேவநாகரி (இந்தி) வரி வடிவில் தந்திகள் எழுதப்பட வேண்டுமென்ற நடைமுறை உள்ளது. வெவ்வேறு வட்டார மொழிகளுக்காக ஒரு தனி "மோர்ஸ் கோடு" என்னும் தந்திக் குறியீட்டுத் தொகுதியை உருவாக்குவது செயல்முறையில் சாத்தியமல்ல. மேலும் பல்வேறு வட்டார மொழிகளில் டெலிபிரிண்டர் பொறிகளைத் தயாரிப்பதற்குச் செலவு அதிகமாகுமென்பதால், இத் திட்டத்தைச் செயல்படுத்துவது ஆதாயமற்றதாகும். அனைத்திந்தியத் தன்மை கொண்டுள்ள தந்திப் பணிகளில் வட்டார மொழிகளைப் பயன்படுத்தினால் மாநிலங்களுக்கிடையே செய்திகளை அனுப்புதல், வட்டாரமொழிகள் "மோர்ஸ் கோடு" அறிந்துள்ள பணியாளர்கள் தந்திச் செய்திகளை அனுப்புமிடம், தந்திச் செய்திகளைப் பெறுமிடம் ஆகிய இருமுனைகளிலும் கிடைப்பதுபோன்ற ஏனைய பிரச்சினைகள் எழும். எனவே, ஆங்கில வரி வடிவ எழுத்துக்கள், தேவநாகரி வரிவடிவில் எழுத்துக்கள் நீங்கலான பிற வரிவடிவ எழுத்துக்களில் எழுதப்படும் தந்திகளை ஏற்றுக்கொள்வது தற்போது இயலாது என்று மத்திய அரசிடமிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், தமிழிலே தந்தி அடிக்க முடியும் என்றும் அதற்கான 'கோட்' போன்றவற்றையெல்லாம் திருச்சியிலே இருக்கிற அங்கே பணியாற்றக்கூடிய ஒரு ஊழியர் ஒரு புத்தகமாகப் போட்டு அது வெளிவந்திருக்கிறது. அதை அமல் நடத்தச் செய்வதற்கு நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மத்திய அரசாங்கத்திற்கு வற்புறுத்தும்பொழுது, மீண்டும் அந்தக் கருத்தை வலியுறுத்துவோம்.

Assistance from Agricultural Refinance Corporation

*10 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether this Government has sought the assistance of the Agricultural Refinance Corporation to improve agriculture in Tamil Nadu; and

(b) if so, the details thereof and the allocation of finance, district-war?